**OS.NO. 26/2020 DW-1**

நாள் : 20.08.2025

பெயர் : ஆறுமுகம்

த/பெ : அப்பாசாமி

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனது மனைக்கு கிழக்கு புறமாக எனக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண் என்ன என்றால் 551 / 43 ஆகும். அந்த இடத்தை பயன்படுத்தி தான் நான் தெருவிற்கு போக வர உள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக குப்புசாமி நிலத்தின் வழியாக தான் எனது அம்மா, தம்பி நான் ஆகியோர் வழி பயன்படுத்தி வந்தோம் என்றால் சரியல்ல. வாதி நான் அவரது நிலத்தின் வழியாக தான் சென்று வந்து கொண்டிருந்தேன் என்றாலும் தற்போது பொய் சாட்சியம் அளிப்பதாக கூறுகிறார் என்றால் சரியல்ல. எனது இடத்தின் எந்த புறத்தில் அரசு கழிவறை உள்ளது என்றால் கிழக்கு புறமாக உள்ளது.

அரசு கழிவறை கட்டியுள்ள அந்த இடம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது ஆகும். அந்த இடம் எனக்கு சொந்தமானது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தற்போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதி நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அந்த கழிவறை குப்புசாமி இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண் 551 ல் எனக்கு சொந்தமாக எத்தனை இடங்கள் உள்ளன என்றால் நான் வீடு கட்டியுள்ள இடங்கள், மாட்டு கொட்டகை உள்ள இடம் இந்த சர்வே எண்ணில் உள்ளது. அதற்கு தனிதனியாக பத்திரங்கள் உள்ளதா என்றால் தனிதனி பத்திரமாக இல்லை தாய் பத்திரம் ஒன்று உள்ளது. எனது வீடு சர்வே எண் 551/42 ல்

உள்ளது அதற்கான ஆவணம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். (**தற்போது சாட்சி தனது வழக்கறிஞரிடம் கொடுத்ததாகவும் அவர் தாக்கல் செய்தாரா என்று தெரியாது என்றும் கூறுகிறார். )**

சர்வே எண் 551 உட்பிரிவு ஆகியுள்ளதா என்றால் ஆமாம். 4 அண்ணன் தம்பிகள் மேல் உள்ளது. உட்பிரிவு எண் என்ன என்றால் உட்பிரிவு ஆகவில்லை ஆனால் 4 பேர் மேலும் உள்ளது. பாகப்பிரிவினை நாங்கள் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆகவே சர்வே எண் 551 யை நான் தான் முழுவதுமாக அனுபவித்து வருகிறேனா என்றால் ஆமாம். எனது சொத்திற்கு கிழக்கு புறத்தில் வடக்கு – தெற்கு பாதை உள்ளது அதனை கிழக்கு – மேற்காக நான் தடுப்பு செய்துள்ளேன் என்றால் இல்லை. வாதி நான் அந்த கிழக்கு – மேற்கு வழியை தான் அடைத்துவிட்டேன் என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. எனது இடம் எனவே அதை நான் பாதுகாப்பு செய்துள்ளேன். அப்படி என்றால் அந்த வடக்கு – தெற்கு பாதை என்னுடையது என்று கூறுகிறேனா என்றால் ஆமாம் அது மொத்தம் 21 ½ கஜம் நீளம், அகலம் 3 ½ கஜம் உள்ளது. அந்த வடக்கு – தெற்கு பாதை என்னுடையது என்பதனை எனது பதில் அறிவிப்பிலும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் உள்ள ஆங்கிலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் ஆமாம். நான் பதிலுரையில் வடக்கு – தெற்கு பாதை உள்ளதாக கூறிப்பிடாமல் தற்போது உள்ளது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை பத்திரமே தாக்கல் செய்துள்ளேன். நான் அது போன்று எந்த பத்திரமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியும் பொதுமக்களும் பொதுவழி பாதையாக பயன்படுத்தி வந்த இடத்தை தான் நான் தடுப்பு செய்துள்ளேன்

என்றால் இல்லை. எனது சொத்து சம்மந்தமாக பட்டா தாக்கல் செய்துள்ளோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு சொத்தை பார்வையிட்டால் நான் தடுப்பு செய்தேனா என்று தெரியவரும் என்றால் நான் தடுப்பு செய்ததாக தான் தற்போதும் கூறுகிறேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாதி கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA Digitally signed by SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.